திருப்போரூரில் அ.தி.மு.க.வினர் நடத்திய பொய் பிரச்சார ஆர்ப்பாட்டத்தை கண்டித்து திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.ஆர். எல்.இதயவர்மன் தலைமையில் நடைபெற்ற பதில் விளக்க மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் – சிறப்பு பேச்சாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் விளக்க உரையாற்றினார்கள். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆர்.எஸ்.செந்தில்குமார், திருப்போரூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் சேகர், திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியச் செயலாளர் வீ.தமிழ்மணி, மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன், பேரூர் செயலாளர்கள் மு. தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.டி.அரசு மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை வேப்பேரியில், நேற்று (10.07.2025) தமிழ்நாடு அரசு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இளையோர் இலக்கிய பயிற்சி பாசறையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை செயலாளர் வே. ராஜாராம், தமிழ் வளர்ச்சி துறை இயக்குநர் முனைவர் ந.அருள் கால்நடை மருத்துவ கல்லூரி முதல்வர் முனைவர் சி.சௌந்தரராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சாதி ஒழிப்பிற்கான முதல் படி “சமூக நீதி விடுதிகள்” என அழைப்பு!

ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது! இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, ஜூலை 11- தமிழ்நாடு முழுவதும் இருக்கும் பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர், பழங்குடியினர், சீர்மரபினர், கள்ளர், மற்றும் சிறுபான்மையினர் என்ற பெயரில் இயங்கும் 2739 அரசு விடுதிகள் இனி மேல் “சமூக நீதி விடுதிகள்” என்ற பொதுப்பெயரை சூட்டும் இந்த அறிவிப்பினை ஆதித்தமிழர் பேரவை மனதார வரவேற்கிறது என்று பேரவைத் தலைவர் இரா. அதியமான் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

பள்ளி மற்றும் கல்லூரிகளின் படித்து வரும் ஏழை எளிய, விளிம்பு நிலை, ஒடுக்கப்பட்ட மாணவர்கள் தங்கி பயில்வதற்கான விடுதிகளை ஒரே பெயரில் அழைக்கும் வகையில் “சமூக நீதி விடுதிகள்” என்ற அரசாணையை முதல்வர் பிறப்பித்திருக்கிறார்.

ஒருவர் எங்கிருந்து வருகிறார் என்பதை கணக்கில் கொண்டு உளவியல் ரீதியாக அவர் இந்த சாதி மதத்தைச் சேர்ந்தவராக இருக்கக் கூடும் என்ற அடையாளத்தை தரக்கூடிய இடமாக பி.சி. விடுதி, எம்.பி.சி. விடுதி, சீர்மரபினர் விடுதி, சிறுபான்மையினர் விடுதி, ஆதி திராவிடர் விடுதி, பழங்குடியினர் விடுதி மற்றும் கள்ளர் விடுதி ஆகியவை உணர்த்துகிறது.

இதை உடைக்க வேண்டும் என்ற பரிந்துரையை முன்னாள் நீதிபதி சந்துரு அரசுக்கு வழங்கியிருப்பதோடு நாமும் பொதுப்பெயரை சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கிறோம்.

அதனடிப்படையில் சாதிய வேறுபாடுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் முற்றிலுமாக ஒழிக்கும் பயணத்தில் முக்கிய படிநிலையாக கருதுமிடம் பள்ளி மற்றும் கல்லூரிகள்.

அதனால் தான் அந்த சாதி ஒழிப்பை அங்கிருந்து முன்னெடுப்பது தான் அவசியம் என்பதை மிகவும் கவனமாக கையாண்டிருக்கிறார் நமது முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

சமூக நீதி - சம நீதி - சட்டநீதி அனைவருக்கும் பொது என்ற நிலையை உருவாக்கும் நம் திராவிட மாடல் அரசு தற்கால நம் இளம் சந்ததியினர் சாதி வேறுபாடுகளை தன் எண்ண ஓட்டத்தில் இருந்து துடைத்தெறிய வேண்டும் என்பதற்காகத் தான் அனைத்து விடுதிகளின் பெயரை மாற்றி “சமூக நீதி விடுதிகள்” என்ற பொதுப் பெயரை சூட்டியுள்ளதற்கு ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது, பாராட்டுகிறது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிபூண்டி கிழக்கு ஒன்றியம் எஸ்.ஆர்.கண்டிகை கிராமத்தில் "ஓரணியில் தமிழ்நாடு" தி.மு.க. உறுப்பினர் சேர்க்கையை ஒன்றியச் செயலாளர் நா.பரிமளம் முன்னிலையில் மாவட்ட துணைச் செயலாளர் கதிரவன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.ரோஸ் பொன்னையன், எம்.ஜெயசந்திரன், எஸ்.காலத்தி, ரவி, மு.குமார், ஆர்.சுஜாகர், ஜெ.ரமேஷ்குமார், உமாபதி, எஸ்.பாஸ்கர், எஸ்.ராகவய்யர், டி.முனிசேகர், கே.பிரபாகர், ஏ.கே.முரளி, ராஜா, சரத்குமார்ர், ஐ.டி.குமார், சரவணன், சேகர், அருள்தாஸ் ஆகியோர் வீடு வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கை செய்தனர்.

மனிதநேய மக்கள் கட்சி மாநாட்டின் கோரிக்கையை ஏற்றுப் பேசிய

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை!

சென்னை, ஜூலை 11 “மனிதநேய மக்கள் கட்சி மாநாட்டின் கோரிக்கையை செவிசாய்த்து பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி” என்று மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அக்கல்லூரியின் பவள விழா ஆண்டின் தொடக்க விழாவில் “இஸ்லாமியர்கள் அரசியல் உரிமையைக் காப்பாற்றும் இயக்கமாக திமுக இருக்கும் “ என்று முதல்வர் பேசியிருக்கிறார்.

ம.ம.க.வின் மதுரை எழுச்சி பேரணி மாநாட்டின் கோரிக்கையைச் செவிசாய்த்து மேடையில் பேசிய முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று காந்தி வழி அம்பேத்கர் வழி பெரியார் வழி என்று மாணவர்களுக்குப் பல வழிகள் உள்ளன. ஆனால் ஒருபோதும் கோட்சே வழியில் சென்று விடக்கூடாது. மாணவர்களுக்குக் கல்விதான் நிலையான சொத்து என்றும் சமூக அக்கறையும் தேவை என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பேசியிருப்பது வரவேற்கத்தக்கது.

காலத்தின் தேவை அறிந்து மாணவர்களுக்குச் சரியான அறிவுரையை முதல்வர் அவர்கள் வழங்கி இருக்கிறார்.

சிறுபான்மையினர் உரிமையைக் காப்பதிலும் மாணவர்களுக்கு நேரிய வழி காட்டியாகத் திகழ்வதிலும் தமிழ்நாடு முதலமைச்சரின் உள்ளத்தில் நிறைந்திருக்கும் அக்கறையின் வெளிப்பாடாக அவரது இன்றைய உரை அமைந்திருப்பது பாராட்டுக்குரியது.

இவ்வாறு எம்.எச்.ஜவாஹிருல்லா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.